# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

தொகுதி - 2



தமிழ் உயராய்வு மையம்

பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)

மதுரை - 18

Scanned by CamScanner

# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

(பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு)

ISBN: 978-93-87865-06-8

தொகுதி - 2

(28.9.2018, 29.9.2018 ஆகிய இரு நாட்களில் நடைபெற்ற
பன்னாட்டுக் கருத்தரங்கில் தமிழ்த்துறையினரால் வெளியிடப்பட்டது)

பதிப்பாசிரியர்கள்

முனைவர் **ஆ. பாப்பி கமலா பாய்,** தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர் **சி. அருள் மைக்கேல் செல்வி**

முனைவர் **இரா. டயானா கிறிஸ்டி**

முனைவர் **இரா. ஏஞ்சல்**

திருமதி **பா. திவ்யா**

திருமதி **டே. ஆனி மரிய ஜான்சி**

வெளியீடு

**தமிழ் உயராய்வு மையம்**

**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)**

**மதுரை - 18**

Scanned by CamScanner

| | | | |
|---|---|---|---|
| 30. | செல்வன் ஜில் டேனியல் தங்கராஜ், பா. | திருவிவிலியத்தில் மனிதநேயம் | 111 |
| 31. | ஜீவராணி, த. | சமய நல்லிணக்கத்திற்கு இயேசுவின் பங்களிப்பு | 116 |
| 32. | செல்வி ஜூலியட் தேவகிருபை,க. | திருவிவிலியம் காட்டும் அன்பும் சகோதரத்துவமும் | 120 |
| 33. | திருமதி ஜெபமேரி, ம. | திருவிவிலியத்தில் ரூத் | 123 |
| 34. | செல்வி ஜெயப்பிரியங்கா, இர. | திருவிவிலிய நீதிமொழிகள் காட்டும் அறச்சிந்தனைகள் | 127 |
| 35. | திருமதி ஜெனிபர், ரா. | கிறித்தவமும் தமிழும் | 130 |
| 36. | ஜேனட் பெல்சியாள், ஞா. | விவிலியத்தில் வாழ்வியல் மதிப்பீடுகள் | 134 |
| | **காப்பியம்** | | |
| வ. எண் | பெயர் | தலைப்பு | |
| 37. | முனைவர் அலமேலு, லெ. | தேம்பாவணியில் இயற்கையும் மனிதமும் | 137 |
| 38. | முனைவர் அலிபிநிஷா, மு. | சிலுவைப்பாட்டில் மனிதம் | 140 |
| 39. | அஜிதா, நா. | தேம்பாவணியில் தாவீதன் இறைவன் மீது கொண்ட பற்று | 145 |
| 40. | திரு. கருணாகரன், கோ. | வளன் சனித்த படலம் கூறும் தாவீது அரசனின் உயர் பண்புகள் | 147 |
| 41. | திருமதி கார்த்திகாயினி, வி. | கிறித்தவக் காப்பியங்கள் காட்டும் மனிதநேயம் | 151 |
| 42. | திரு. சங்கர், இர. | இரட்சணிய மனோகரம் காட்டும் மனித மதிப்பீடுகள் | 155 |
| 43. | திருமதி சித்ராதேவி, த. | கிறித்தவ இலக்கியங்களும் மனித மதிப்பீடுகளும் | 159 |
| 44. | முனைவர் சுபாசினி, பெ. | தேம்பாவணி காப்பியத்தில் காணலாகும் அறச்சிந்தனைகள் | 164 |
| 45. | முனைவர் சுஜாதா, க. | அன்னையின் பெருமைகள் | 166 |
| 46. | முனைவர் சூசை ஜெஸிந்தா மெர்ஸி, ஜோ. | தேம்பாவணியில் வளனின் மாண்புகள் | 169 |
| 47. | திருமதி செல்வகனி, ரா. | திருக்காவலூர் அடைக்கல அன்னையின் மேன்மைகள் | 172 |
| 48. | முனைவர் சொர்ணமாலா, சி. | தேம்பாவணியில் வாழ்வியல் அறம் | 176 |
| 49. | முனைவர் தேவதா, ஆ. | தேம்பாவணி காட்டும் மனித மதிப்பீடுகள் | 179 |
| 50. | செல்வி பவித்ரா, மு. | தேம்பாவணியில் அறச்சிந்தனைகளும் இறைக்கொள்கையும் | 183 |
| 51. | பிரேமா கிறிஸ்டி, ஜோ. | கிறித்துவக் காப்பியம் தேம்பாவணி சுட்டும் மனிதம் | 186 |
| 52. | முனைவர் பேச்சியம்மாள், சு. | சிலுவைநாதர் திருச்சரிதம் என்னும் காப்பியத்தின் உத்திகளும் நுட்பங்களும் | 190 |


Scanned by CamScanner

# கிறித்தவ இலக்கியங்களும், மனித மதிப்பீடுகளும்

**த. சித்ராதேவி**

உதவிப்பேராசிரியர்,

தமிழ்த்துறை, சுயநிதிப்பிரிவு,

பாத்திமா கல்லூரி, மதுரை.

**முன்னுரை :**

"வாழ்க்கையை அதன் தத்துவத்தைப் புரிந்து கொண்டவர்களால் மட்டுமே அனுபவிக்க முடியும்." வாழ்க்கைக்கு இன்றியமையாதது மனோதிடம். பலமிக்க மனமுடையவனால்தான் வாழ்க்கைக்குத் தேவையானவற்றைத் தேட முடியும். தன்னிடம் உள்ள பலத்தைப் பண்புடன் விருத்தி செய்தல் வேண்டும். கிறித்தவம், பலம் தான் சமயவாழ்வு என்கிறது.

பலமானவன், தன்னம்பிக்கை உடையவனாக இருப்பான். தேவனிடத்தில் அளவுக்கதிகமான நம்பிக்கை வைத்திருப்பவன், மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வான். அவன் மிகுந்த தன்னம்பிக்கையுடன் வாழ்வதால் தன்னை இழிவானவனாக, செயலற்றவனாக நினைக்க மாட்டான். வெற்றியைவிடத் தோல்விகளை மனத்திடத்துடன் தாங்கி, அவற்றை வெற்றிகளாக்க முயன்று வெற்றியும் அடைவான். தோற்றுவிட்டேனே என்று கவலைகொண்டு அதைப்பற்றி இடையறாது சிந்தித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பவர்களால் வாழ்வில் வெற்றியடைய முடியாது. வெற்றியடைபவன் அடுத்த முயற்சியைத் தொடங்கி அதையும் வெற்றியாக்க நினைப்பான்.

வெற்றியடைய வேண்டுமானால் முதலில் அச்சத்தை நீக்குதல் வேண்டும். 'தற்செயலாகத் தோல்வி ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது?,' 'என்னிடமுள்ள சிறிய முதலும் அழிந்துவிடுமே...?' என்று நினைப்பவன் தொழிலைத் தன்வாழ்வில் தொடங்கமாட்டான்.

பலத்துடன் முயன்றால் முயலும் காரியம் அனைத்திலும் வெற்றியடையலாம் என்று நினைப்பவன் தன்னம்பிக்கையுடன் தொழிலைத் தொடங்குகிறான். விடாமுயற்சி செய்கிறான். நான் கட்டாயம் வெற்றியடைவேன் என்ற எண்ணம் அவனது மனதில் இருப்பதால் அவன் தோல்வியடைய வாய்ப்பு இருக்காது.

"மனிதனின் நியாயப் பூர்வமான எண்ணங்களுக்கு எப்போதும் தேவன் உதவி செய்வார்." என்று திருவிவிலியக் கருத்துக்கள் கூறுகின்றன. மனிதனை மனிதனாக வாழவைக்க கிறித்துவ இலக்கியங்கள் பெருந்துணை புரிந்துள்ளன என்று பின்வரும் பகுதியான பெத்தலகேம் குறவஞ்சி பாடலிலும், தேம்பாவணியின் 'வளன் சனித்த படலத்திலும்' விரிவாகப் பார்க்க உள்ளோம்.

**மனிதத்துவம் :**

ஒவ்வொரு கிறித்தவ இலக்கியமும், தனிமனிதனுக்கும், ஒட்டுமொத்தக் குடும்பத்தினருக்கும் ஒரு பெரிய வழிகாட்டியாக உள்ளது. இந்த அவசர உலகத்தில் மனிதன் என்பவன் தன்னிடம் இருக்கும் நற்குணங்களை மறந்து, தனக்கு, தான் என்ற அகந்தைக்கு உட்படுகின்றான். இப்படி 'தான்' என்ற அகந்தைக்கு உட்படும் அவன் தன்னிடம் இருக்கும் மனிதத்துவத்தை இழந்துவிடுகிறான்.

இதில் இருந்து எல்லாம் மனிதனை மீட்டு அவன் உள்ளிருக்கும் நல்ல குணங்களை வெளிக்கொணர்ந்து, 'மனிதன்' என்றால் அன்பு, பாசம், பற்று என்ற அனைத்திற்கும் உட்பட்டவன் என்பதை கிறித்துவ இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன.



Scanned by CamScanner